விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–12.40 p.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம்–01.05 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.349/2023**

**Prosecution witness : அ.சா.3** **Date : 26.11.2024**

| | |
|---|---|
| **Name : சக்திவேல்** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : கோவிந்தராஜ்** | **Calling : வனக்காவலர்** |
| **Village : தங்கமாபுரிபட்டணம்** | **Age : 22** |

(Accused present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேட்டூர் வனசரகத்தில் வனகாவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.07.2022 ம் தேதி காலை 04.30 மணியளவில் மேட்டூர் வட்டம் மேட்டூர்வனசரகம் உள்ளுர்தண்டா தெற்குபிரிவு கொளத்தூர் பீட் எல்லைக்குட்பட்ட கொளத்தூர் ஒன்றியம் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி கூல்கரடு பகுதியில் வசிக்கும் புஸ்பநாதன் மகன் தோமஸ் 61 வயது மதிக்கதக்க என்பவரின் பட்டா நிலத்தில் மின் இணைப்பு எண்.302 ல் அவருக்கு சொந்தமான நிலத்தில் பயிரிரடப்பட்ட பருத்தி காட்டிற்குள் ஈரோடு வனகோட்டம் வடபர்கூர் காப்பு காட்டிலிருந்து ஒற்றை காட்டு யானை உணவுக்காக காப்புக்காட்டிலிருந்து உணவு தேடி வந்தபோது எதிரியின் விவசாய காட்டு நிலத்தில் குச்சி நட்டு இரும்புகம்பியின் மூலமாக மின்சாரம் பாயும் வகையில் இருந்ததை அதிகாலை யானை எதிரியின் தோட்டத்திற்குள் உணவு தேடி சென்றபோது மும்முனை மின்சாரம் பாய்ந்து சம்பவம் இடத்திலேயே இறந்து விட்டது என்று தகவல் சொன்னார்கள். நான் மற்றும் வனவர் ரகுநாதன், வனக்காப்பாளர் பத்ரன் என்பவரும் உடனடியாக எதிரியின் தோட்டத்திற்கு சென்றோம். இந்த சம்பவம் குறித்து பத்ரன் தனி புகார் ஒன்று கொடுத்தார்.

2. சம்பவம் இடம் செல்வதற்கு முன்பாக மாவட்ட வனஅலுவலர் சேலம் மற்றும் சேலம் மண்டலம் வன பாதுக்காவலர், உதவி வன பாதுக்காவலர், NGO, கால்நடை மருத்துவர் செட்டியூர், தீயணைப்புத்துறை, மின்சாரதுறை, காவல் துறை மற்றும் வருவாய்துறை தகவல் தெரிவிக்கப்பட்டது. மண்டல வனபாதுகாவலர், மாவட்ட வனஅலுவலர், உதவி வனபாதுகாவலர் சேலம், மேற்சொன்ன துறை அதிகாரிகள் மற்றும் ஆலமரத்துப்பட்டி கிராம நிர்வாக அலுவலர், கொளத்தூர் செயற்பொறியாளர் ஆகியோர் சம்பவம் இடத்திற்கு வந்தார்கள். ஆஜர் எதிரி சம்பவம் இடத்தில் இருந்தார். அவர் 24.07.2022 ம் தேதி காலை 06.30 மணிளயவில் வனசரக அதிகாரிகள் மற்றும் ஆலமரத்துப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் யாருடைய தூண்டுதல் மின்றி ஒப்புதல் வாக்குமூலத்தை சம்பவம் இடத்திலேயே கொடுத்தார். அதனை ராமன் பட்டி பீட் வனகாப்பாளர் குழந்தைவேல் பதிவு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 4 வது கையெழுத்து என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 4 வது கையெழுத்து அ.த.சா.ஆ.7 குறியீடு செய்யப்படுகிறது.)** பிறகு உள்ளூர் தண்டா தெற்குபிரிவு வனவர் ஸ்தலமகஜர் தயார் செய்தார். சம்பவம் இடத்தில் இறந்துபோன ஆண் காட்டு யானையின் கால் பகுதியில் இரும்பு கட்டு கம்பிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மின்சார துறையினர் வந்து மின் இணைப்பை துண்டித்தனர்.

3. சம்பவம் இடத்தில் H நமூனா தயாரிக்கப்பட்டது. அதனை பத்ரன் வனக்காப்பாளர் தயார் செய்தார். அதில் யானையின் இடது மற்றும் வலது தந்தங்கள் மற்றும் மரக்குச்சிகள் கட்டுக்கம்பி ஆகியவற்றை கைப்பற்றினார். சம்பவம் இடம் குறித்து தோராய வரைப்படம் தயார் செய்யப்பட்டது. இறந்து யானையை மாவட்ட வனஅலுவலர் சேலம் அவர்களின் உத்தரவுப்படியும் அவர்களின் முன்னிலையிலும் பிரேத பரிசோதனை மேற்கொண்டு சம்பவம் இடத்திலேயே மருந்து தெளித்து முறைப்படி சாட்சிகள் முன்னிலையில் அடக்கம் செய்யப்பட்டது. அது குறித்த வழக்கு சொத்துக்கள் மற்றும் யானையின்

தந்தங்கள், இறந்த யானையை புகைப்படம் எடுத்து கனம் நீதிமன்றத்தில் வனசரகர் தாக்கல் செய்துள்ளார். அதனுடன் குறுந்தகடு இணைக்கப்பட்டது. **(புகைப்படங்கள் முறையே அ.த.சா.ஆ.8 மற்றும் குறுந்தகடு அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** பிறகு எதிரியுடன் வழக்கு சொத்துக்களையும் மேட்டூர் வனசரகர் அலுவலகத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு கடவுச்சீட்டு பெற்று எதிரியை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி அடைப்பு காவலுக்கு அழைத்துச்சென்றோம். பிடிபொருட்களை கனம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினோம். ஆஜர் எதிரி தான் அவருடைய தோட்டத்தில் மின்சாரம் பாய்ச்சி யானை இறக்க காரணமாக இருந்தார். வனசாரகர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>

<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>

**ஒம்/−அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**